|---|---|---|---|
| **மூலதன செலவு** | | | |
| **<u>நிலையான சொத்துக்கள்</u>** | | | |
| **<u>கொள்ளல்</u>** | | | |
| ஆதனங்கள்/சாதனங்கள்/பொறித்தொ | 1,250,000.00 | 1,151,275.20 | 92.10 |
| மரத்தளபாடம் | 800,000.00 | 296,454.19 | 37.06 |
| பிற | 250,000.00 | 18,140.00 | 7.26 |
| | **2,300,000.00** | **1,465,869.39** | 63.73 |
| | | | |
| **பிற மூலதனச் செலவுகள்** | | | |
| **<u>NHRDC செயற்பாடுகள்</u>** | | | |
| கல்வி / புள்ளிவிபரம் / ஆய்வு | | | |
| ஆராய்ச்சி | 43,100.00 | 43,100.00 | 100.00 |
| கருத்தரங்குகள், செயலமர்வுகள் | 15,333,000.00 | 14,836,492.75 | 96.76 |
| HRD கருத்திட்டம் | 4,153,100.00 | 4,585,055.31 | 110.40 |
| வெளியீடுகள் | 0.00 | 0.00 | 0.00 |
| | **19,529,200.00** | **19,464,648.06** | 99.67 |
| **மொத்த மூலதனச் செலவு** | **21,829,200.00** | **20,930,517.45** | 95.88 |

# நிதித் தகவல்கள் மேற்கோள் காட்டல்-2011

| மீண்டுவரும் செலவினம் | |
|---|---|
| ஆட்களின் சம்பளங்கள், வேதனங்கள் | 5,370,902.34 |
| ஒப்பந்த சேவைகள் | 2,474,060.05 |
| பிரயாணச் செலவினம் | 365,769.74 |
| வழங்கல் | 544,637.65 |
| பேணுகை செலவினம் | 2,082,475.57 |
| பிற | 227,876.14 |
| **மொத்தம்** | **11,065,721.49** |

| மூலதன செலவினம் | |
|---|---|
| ஆதனங்கள் சாதனங்கள் பொறித்தொகுதி | 1,751,369.39 |
| கற்கை / புள்ளிவிபரம் / ஆய்வு } ஆராய்ச்சி | 43,100.00 |
| எச். ஆர். டீ. கருத்திட்டம் | 3,870,537.31 |
| கருத்தரங்குகள், செயலமர்வுகள் | 15,268,510.75 |
| **மொத்தம்** | **20,933,517.45** |






විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல
My No.
பீவை/பீ/என்எச்ஆர்டீசீ/ 2011/எப்ஏ

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
2012 நவம்பர் 14

தலைவர்,

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திப் பேரவை

**இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திப் பேரவையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திப் பேரவையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி பேரவை அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2012 மே 15 ஆந் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திப் பேரவையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

அரசாங்க மூலதன மானியமாக பேரவைக்கு மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 8,567,852 தொகை இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 24 இன் பிரகாரம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வரைவு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் பேரேட்டுடன் இணங்காமை ரூபா 68,915 தொகை எம்மால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் பிரகாரம் அவசியமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மேலும் அத்தகைய கணக்கீட்டுக் குறைபாடுகள் இருக்கக் கூடும் என்பது கணக்காய்வில் மறுக்கப்பட முடியாததாகும்.

**2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

2011 ஆம் ஆண்டின் போது பேரவையின் மனித வள அபிவிருத்திச் செயற்பாடுகளாக வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிக்கும் வருடாந்த முன்னேற்ற அறிக்கையில் அவ்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளாகக் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிக்குமிடையே ரூபா 282,452 தொகையான இணக்கமற்ற வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | **அதிகாரச்சட்டம்** | |
| (i) | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | நிதி ஆண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வருடாந்த வரைவு அறிக்கையினை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு மதிப்பீடு பணிப்பாளர் சபையினால் 2012 மார்ச் 29 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டம் | ஏற்பாடு செய்யப்பட்ட பணிக்கொடைக் கொடுப்பனவு எதிர்காலப் பொறுப்புக்களை எதிர்கொள்ளக் கூடியவகையில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) நிதிப் பிரமாணம்

---------------------------

| | |
|---|---|
| நி.பி. 371.2(ஆ) உப பந்தி | குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதியாக ரூபா 20,000 இற்கு மேலான தொகை பெற்றுக்கொள்ளப்படலாகாத போதிலும் 23 சந்தர்ப்பங்களின் போது ரூபா 20,000 இற்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,340,000 ஆகும். |

(இ) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டி கைநூல்

---------------------------------------------------------------

| | |
|---|---|
| 1.2.1 ஆம் உப பந்தி | அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு நடைமுறையைப் பின்பற்றாது 18 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,483,317 தொகையான மரத்தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

**(ஈ) சுற்றறிக்கை**

-------------------

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | |
|---|---|
| (i) 5.2.6 ஆம் உப பந்தி | மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறான பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை என்பன தயாரிக்கப்பட்டு பாதீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 6.5.1 ஆம் உப பந்தி | நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்கு முன்னர் வருடாந்த வரைபு அறிக்கை மற்றும் கணக்குகள் வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கான பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 7.4.2 ஆம் உப பந்தி | சிரேஷ்ட முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் போது பேரவையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா 758,795 பற்றாக்குறையானதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,563,052 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ரூபா 2,321,847 ஆன வீழ்ச்சிக்கு அரசாங்க மீண்டெழும் மானியம் ரூபா 334,893 ஆல் குறைவடைந்திருந்தமையும் மீண்டெழும் செலவினம் ரூபா 2,021,393 ஆல் அதிகரித்திருந்தமை போன்ற விடயங்கள் முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

**3.2 செயற்பாட்டு மீளாய்வு**

**3.2.1 செயற்திறன்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பேரவை ஸ்தாபிக்கப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 14(I) ஆம் பந்தியின் பிரகாரம் தேசிய மனிதவள கொள்கையின் சகல பிரிவுகளில் இருந்தும் அமைச்சருக்கு அறிவுறுத்தல்கள் வழங்குதல், தேசிய கொள்கைக்கு இணங்கும் வகையிலான மனித வள அபிவிருத்தித் திட்டங்களையும்

நிகழ்ச்சித்திட்டங்களையும் அரசாங்கத்திடம் முன்வைத்தல் மற்றும் தேசிய மனிதவள கொள்கைகள் மற்றும் அமுலில் உள்ள திட்டங்களுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் தொடர்பாக அமைச்சருக்கு சிபாரிசு செய்வதனைப் போல் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தித் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவது தொடர்பாக ஆராய்ந்தறிவது போன்ற சபையின் பிரதான செயற்பாடுகள் மற்றும் பணிகள் எதுவும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேரவையின் அடிப்படை நோக்கமான மனிதவள அபிவிருத்திக்காகச் செலவிடப்பட்ட தொகை, மொத்த மீண்டெழும் செலவினத்தின் சத வீதமாக கீழே தரப்படுகின்றது.

| ஆண்டு | மொத்த மீண்டெழும் செலவினம் | மனிதவள அபிவிருத்தி செலவினம் | மொத்த மீண்டெழும் செலவினத்தின் சதவீதமாக மனிதவள அபிவிருத்திச் செலவினம் |
|---|---|---|---|
| ---------- | ------------------------------ | ----------------- | -------------------- |
| | | | % |
| 2005 | 5,152,941 | 844,454 | 16.4 |
| 2006 | 5,868,600 | 692,147 | 11.8 |
| 2007 | 6,086,767 | 535,632 | 8.8 |
| 2008 | 6,728,939 | 659,801 | 9.8 |
| 2009 | 8,675,394 | 1,540,029 | 17,.7 |
| 2010 | 12,423,287 | 3,378,959 | 27,.2 |
| 2011 | 30,247,869 | 19,182,148 | 63.42 |

2011 ஆம் ஆண்டின் போது மனிதவள அபிவிருத்திச் செலவினத்தில் இலத்திரனியல் மற்றும் பத்திரிகை விளம்பரத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 9,939,546 தொகையான செலவினம் கழிக்கப்பட்டதை அடுத்து மொத்த மீண்டெழும் செலவினத்தின் சதவீதமாக மனித வள அபிவிருத்திச் செலவின சதவீதம் 63.42% அல்லாது 48% ஆன குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது.

(இ) டபிள்யூ - 9 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலக்கிடப்பட்ட குழுவின் மனோநிலையை அபிவிருத்தி செய்வதற்காக ஆளுமை அபிவிருத்திச் செயற்பாட்டின் மூலம் அவர்களை உற்சாகமூட்டி மாற்று தொழில்மார்க்கங்களில் ஈடுபடுவதன் மூலம் வாழ்க்கையில் வெற்றியடையக்கூடும் என சுட்டிக்காட்டி இதற்காக அவர்களுக்கு உரிய பயிற்சி நிறுவகங்களுக்கு தொடர்புபடுத்தப்படுவதை அடிப்படை நோக்காகக் கொண்டு க.பொ.த.(சா.த) சகல பாடங்களிலும் சித்தியெய்தியிராத மாணவர்களை ஊக்குவிக்கும் விசேட செயற்திட்டங்களை செயற்படுத்தியிருந்தது. இது தொடர்பாக ஆய்வு செய்யப்படுகையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மேற்குறித்த செயற்திட்டங்களுக்காக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் ரூபா 12,979,803 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 6,427,856 தொகை அதாவது மொத்த செலவினத்தில் 50% பிரசார நடவடிக்கைகளுக்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ii) பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் 09 பாடங்கள் சித்தியெய்தியிராத மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 8873 ஆன போதிலும், செயற்திட்டத்திற்காக விண்ணப்பித்திருந்த மொத்த மாணவர் எண்ணிக்கை 1201 ஆகக் காணப்பட்டது. அதாவது இலக்கிடப்பட்ட குழுவில் 13% அளவிலான குறைவான அளவாகும்.

(iii) செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது அனைத்து மாவட்டத்திற்கும் ஒரு நாள் கருத்தரங்கும் 05 நாள் முகாம் படி நடாத்துவதை நோக்காகக் கொண்டிருந்த போதிலும் மாவட்ட மட்டத்தில் 14 கருத்தரங்குகளும் 04 வதிவிடச் செயலமர்வுகளும் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அந்த 04 வதிவிட செயலமர்வுகளுக்காக மாணவர்களின் பங்குபற்றல் விண்ணப்பித்த 1201 மாணவர்களில் 510 மாணவர்கள் மாத்திரமேயாகும். எனினும், மாவட்ட கருத்தரங்குகள் மற்றும்

வதிவிட செயலமர்வுகளுக்காக ஏற்கப்பட்ட செலவினம் முறையே ரூபா 439,703 ஆகவும் ரூபா 6,233,420 ஆகக் காணப்பட்டன.

(iv) இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பல்வேறு கல்வியியலாளர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பல்வேறு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்ட போதிலும் செயற்திட்டங்கள் செயற்பட வேண்டிய முறை தொடர்பான பரிந்துரைகள் எதுவும் அவர்களுக்கு கிடைத்திருக்கவில்லை.

(v) அந்த வதிவிட முகாம்களின் இறுதியில் அதில் கலந்துகொண்ட மாணவர்களை பயிற்சி நிறுவகங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக பயிற்சி நிறுவகங்களாக தேசிய தொழில்சார் பயிற்சி மற்றும் தொழிநுட்ப பயிற்சி அதிகாரசபை (NAITA) மாத்திரம் முன்வந்திருந்தது. எவ்வாறெனினும், மாணவர்களின் கல்வி தகமைகள் மற்றும் அவர்கள் எதிர்பார்க்கும் தொழில்சார் பயிற்சிகளுக்குப் பொருந்தும் வகையில் பயிற்சிச் சந்தர்ப்பங்கள் அந் நிறுவகத்திடம் இன்மையால் இந் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(vi) இலக்கிடப்பட்ட கட்டளைகள் மற்றும் அவர்களது எதிர்பார்ப்புகள் தொடர்பாக முன் அறிவு இன்றி எவ்வகையிலும் கவர்ச்சிகரமான பிரசார விளம்பரம் குறித்து மாத்திரம் நம்பிக்கை கொண்டு செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக இது வரை இச் செயற்திட்டத்திற்கு அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் முடியாது தோல்வியுற்றிருந்தது.

(ஈ) ''வேலையற்றமையில் இருந்து வேலை வாய்ப்பிற்கு'' செயற்திட்டம்

அநுராதபுர மாவட்டத்தில் தொழில்வாய்ப்பை எதிர்பார்த்துள்ள நபர்களுக்கு பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பதிவுசெய்யப்பட்டு அத் தகவல்களை சபையின் வலையமைப்பில் வெளிப்படுத்தல், தொழிலை வழங்கக்கூடிய தனியார் நிறுவகங்களைப் பதிவுசெய்து கொண்டு அவர்கள் அனைவரையும் 2012 மார்ச் 31 இற்கு முன்னர் தனியார்

பிரிவுகளின் தொழிலுக்காக அனுப்பிவைப்பதனை நோக்காகக் கொண்டு "வேலையற்றமையில் இருந்து வேலை வாய்ப்பிற்கு" எனும் விசேட செயற்திட்டம் ஒன்று 2012 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

மேற்குறித்த நோக்கை நிறைவேற்றுவதற்காக உள அபிவிருத்தி மற்றும் மனித வள முகாமைத்துவ ஆலோசகருடன் 2011 யூலை 05 ஆம் திகதி உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இச் செயற்திட்டத்திற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பெறுமதி ரூபா 1,248,000 ஆன போதிலும் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 03 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் இச் செயற்பாடு போட்டி விலை மனுக்கோரலிற்காக தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. இவ்வாறே, இந்த அத்தியாயத்தின் 3.12 ஆம் உப பந்தியின் பிரகாரம் உரிய வழங்குனரின் ஆரம்பத் தகமை தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிராததுடன் 8.12.4 ஆம் உப பந்தியின் பிரகாரம் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட கொள்வனவுகளிற்கு இணங்கும் வகையில் சேவையை மேற்கொண்டிருந்தமைக்கான சான்றிதழ் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 மார்ச் 31 ஆம் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2012 ஏப்ரல் 27 கணக்காய்வு திகதி திகதி வரை தரவு வங்கிக்கு உள்ளடக்கப்பட்டிருந்த பதிவுசெய்திருந்த வேலைவாய்ப்பை எதிர்பார்த்துள்ளவர்களின் எண்ணிக்கை 790 ஆகக் காணப்பட்டது. எனினும், இதில் எந்தளவு எண்ணிக்கையானோர் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்பது குறித்தும் பதிவு செய்யப்பட்ட தனியார் நிறுவகங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்கு வழங்கப்படுவதற்கு சபை

தவறியிருந்ததுடன் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடமும் அத் தகவல்கள் எதுவும் இருக்கவில்லை.

(iii) தரவு வங்கியின் பிரகாரம், அநுராதபுரம் மாவட்டத்தில் வேலை வாய்ப்பை எதிர்பார்த்துள்ளவர்களின் எண்ணிக்கை 790 என்பது தர்க்க ரீதியானதென்பதனால் அச் சேவை ஒப்பந்தத்தைப் பொறுப்பேற்ற வழங்குனர் சுயமாக சேவையை முறைப்படி வழங்கியுள்ளாரா என்பது குறித்து கணக்காய்வின் போது சிக்கல் எழுந்திருந்தது. இவ்வாறே, பதிவு செய்யப்பட்ட வேலை வாய்ப்பை எதிர்பார்த்துள்ளவர்களை வேலையில் ஈடுபடுத்துவதற்கு அவசியமான தனியார் நிறுவகம் பதிவுசெய்யப்பட்டிராமையும் வேலையில் ஈடுபடுத்தப்பட்ட நபர்களும் இன்மையால் இச் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,218,153 தொகை விளைவற்ற செலவினமாகியது.

(உ) மனிதவள வருடம்

-----------------------------

2011 செப்தெம்பர் 22 ஆம் திகதி முதல் 2012 செப்தெம்பர் 22 வரை மனித வள அபிவிருத்தி வருடமாக சபையினால் இனங்காணப்பட்டிருந்ததுடன் இதற்காக "நிபுணதா சந்த" எனும் பெயரிலான தொழிற்பயிற்சி தொலைக்காட்சி இசை நிகழ்ச்சி ஒன்றை ஒளிபரப்புவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக பத்திரிகை விளம்பரத்திற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 3,082,453 செலவிடப்பட்டிருந்தது. பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதைத் தவிர 2012 ஏப்ரல் 27 ஆம் திகதி வரையிலும் இச் செயற்திட்டத்தின் முன்னேற்றம் இருக்கவில்லை.

(ஊ) பொது மக்களை விளிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

---------------------------------------------------------

2011 வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது 12 நிகழ்ச்சிகள் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. இதில் 129 நபர்கள் மாத்திரமே கலந்துகொண்டிருந்ததுடன் செயலமர்வுகளிற்குரிய பத்திரிகை

விளம்பரத்திற்காக ரூபா 78,624 தொகையும் செயலமர்வுகளிற்காக ரூபா 12,900 தொகையுமாக ரூபா 91,524 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(எ) செயற்திட்டம் பூர்த்திசெய்யப்படாது கைவிடப்பட்டிருந்தமை

சபையினால் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த பின்வரும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாது 2011 ஆம் ஆண்டில் உள்ளவாறு கைவிடப்பட்டிருந்தன.

(i) பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பாடநெறியைக் கைவிட்டுச் செல்லும் மாணவர்கள் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு உரிய அறிக்கை 2010 ஏப்ரல் 10 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் இது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. செலவிடப்பட்ட தொகை ரூபா 76,875 ஆகும்.

(ii) கௌரவ அமைச்சரின் கட்டளையில் ஆரம்பிக்கப்பட்ட எப் - 3 நிகழ்ச்சித்திட்டம், க.பொ.த உயர் தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெறாது நிர்க்கதியான மாணவர்களுக்கு விசேட தொழிற்திறன் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் உடனடிப் பயிற்சி ஒன்றை வழங்கி தொழிலில் ஈடுபடுத்துவதே அடிப்படை நோக்கமாயினும், எந்த ஒரு மாணவனுக்கும் தொழில் ஒன்றை வழங்கியிராததுடன் சில நாட்களுக்கு பயிற்சிக்காக வருகைதந்த 9737 மாணவர்களில் தற்போதைய முன்னேற்றம் என்ன என்பது குறித்து பின்தொடர் நடவடிக்கையேனும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. 2010 திசெம்பர் முதல் 2011 ஏப்ரல் வரை ரூபா 5,601,870 தொகையான செலவினம் இதற்காகச் செலவிடப்பட்டிருந்ததுடன் இதில் 90% ஆன அதாவது ரூபா 5,066,419 தொகை இலத்திரனியல் மற்றும் பத்திரிகை விளம்பரங்களுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களி பொறுப்பும் நல்ஆளுகையும்

---

### 5.1 கூட்டுத்திட்டம்

---

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் உப பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவு தொடர்பான மீளாய்வொன்று 2010 – 2014 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டு கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, எதிர்கொள்ளப்பட வேண்டிய இலக்குகளின் நிதிசார் பெறுமதி காண்பிக்கப்பட்டிராமையால் ஆண்டிற்கான முன்னேற்றம் நிதிரீதியாக மதிப்பிடப்படுவதற்கு முடியாதிருந்தது. மேலும் 2011 – 2015 காலப்பகுதிக்குரிய மீளாய்வு செய்யப்பட்ட கூட்டுத்திட்டம் 2012 மே 08 கணக்காய்வுத் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயற்பாட்டுத்திட்டம்

---

2011 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத்திட்டம் பணிப்பாளர் சபையினால் திருத்தங்களுடன் 2012 மார்ச் 29 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அதாவது மீளாய்வாண்டு பூர்த்தியடைவதற்கு 03 மாதங்கள் கடந்த பின்னரேயாகும். நிறுவகத்தில் நிலவும் நோக்கங்களுக்கு உடன்படும் வகையில் எதிர்வரும் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகளை மேற்கொண்டு போதிய முகாமைத்துவத்துடன் இதற்காக செலவினத்தை மேற்கொள்வது வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின் நோக்கானமையால் வருடம் கடந்ததன் பின்னர் தயாரிக்கப்படும் திட்டத்தின் ஆக்கபூர்வத் தன்மை கணக்காய்வின் போது சிக்கலானதாகக் காணப்பட்டது.
2011 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் அதன் முன்னேற்றம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

(அ) 2011 வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்தில் காண்பிக்கப்பட்டவாறு ரூபா 8,570,000 தொகையான 08 நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்படாத மனித வள வருடம் எனும் பெயரிலான நிகழ்ச்சித்திட்டத்தின் ஆண்டின் போது ரூபா 3,086,400 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) ஒரு பிரதான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடாத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 50 துணை நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒரு நிகழ்ச்சித்திட்டங்களிற்கு ரூபா 12,500 படி ரூபா 625,000 தொகையான ஏற்பாடு செயற்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அத்தகைய 38 துணை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக மாத்திரம் ரூபா 14,853,000 செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 390,868 ஆகக் காணப்பட்டதுடன் இது திட்டமிடப்பட்ட செலவினத்தில் 3127% அளவிலான சதவீதமாகும்.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

---------------------------------

ஒரு வருடத்திற்கு ரூபா 30 மில்லியன் தொகைக்கும் மேலான மீண்டெழும் செலவினத்தை மேற்கொள்ளும் இப் பேரவையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தோற்றுவிக்கப்பட்டிராததுடன் இளைஞர் விவகார தொழிற்திறன் அபிவிருத்தி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் பேரவையின் நடவடிக்கைகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

------------------------------

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட செலவுகளுக்கும் உள்ளபடியான செலவுகளுக்கும் இடையே முரண்களைக் கருத்திற்கொள்கையில் 08 செலவின விடயங்கள் ரூபா 3,489,511 ஆன கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரது கவனத்திற்குக்

கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு

(ஆ) வழங்கல்கள் மற்றும் சேவைகள்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) உள்ளகக் கணக்காய்வு

(உ) செயற்திட்ட அமுலாக்கம்

ஒப்பம்: எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*

# முன்வரைவு

**<u>இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி ஆலோசனைச் சபையின் 2011 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று பற்றிய 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் சரத்திற்கு அமைவாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை</u>**

பகுதி - 02

நிதிக் கூற்று

2.2. நிதிக்கூற்று தொடர்பான கருத்துத் தெரிவித்தல்

2.2.1. <u>இலங்கை கணக்கீட்டு நியமம்</u>

ஏற்றுக்கொள்ளவில்லை.

2011ஆம் ஆண்டில் அரச மூலதனமான சபைக்கு கிடைத்த தொகை ரூபா 21 மில்லயன் ஆகும். அத்தொகை 24ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

2.2.2 <u>கணக்கீட்டுக் குறைபாடு</u>

(அ) ஏற்றுக்கொள்ளவில்லை

| விபரம் | வேறுபாடு (ரூபா) | செலவுத் தலைப்பு | காரணம் |
|---|---|---|---|
| வாகனப் புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு | 1.800.∴- | 393 | லெட்ஜரின் 393ம் பக்கத்தின் கீழ் மாதம் ரூபா 150 ப்படி 12 மாதங்கள் வரவு வைக்கப்பட்டுள்ளது. |
| மின்சாரம் | 64,224.∴- | 372 | ஜேர்னல் இலக்கம் 15.∴11 |
| நீர் | 2,891.∴- | 373 | ஜேர்னல் இலக்கம் 15.∴11 |
| | 68,915.∴- | | |

(ஆ) ஏற்றுக்கொள்ளவில்லை

2011ஆம் ஆண்டினுள் சபையின் மனிதவள அபிவிருத்தி செயற்பாடாக வருமானச் செலவு கணக்கில் காட்டப்பட்டுள்ள பெறுமதி மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கையில் அந்த வருடத்தினுள் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் பெறுமதி எனம் இரண்டுக்கும் இடையில் வேறுபாடு ஏற்பட்டது ரூபா 282,000.∴- வினாலாகும். அதற்கு காரணம் தயட கிருள நிகழ்ச்சித்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட 280,000 பெறுமதியான 02 மடிக்கணணி (டுயிவழி) மற்றும் ரூபா 2,500 பெறுமதியான பென்டிரைவ் (ீநெ னசளைந) என்பவற்றின் பெறுமதி அதனுள் உள்ளடங்கும். அந்தப் பெறுமதி இறுதிக் கணக்கு தயாரிக்கப்படும் பொழுது 03.∴11ம் இலக்க ஜெர்னல் மூலம் நிலையான சொத்துக் கொள்வனவு கணக்குக்கு சேர்க்கப்பட்டுள்ளது.

<u>2.2.3. சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு ஏற்ப அமையாமை</u>

(அ) சட்டம்

(1) 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க சட்டத்தின் 8(1)ம் சரத்து

ஏற்றுக்கொள்கின்றேன்.

இந்தப் பிழையினை 2012ஆம் ஆண்டில் நிவர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

(11) 1983ஆம் ஆண்டு 12ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பிரகாரம பணிக்கொடை கொடுப்பனவு ஒதுக்கீடு எதிர்கால பொறுப்புகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் முதலீட்டை மேற்கொள்ளாமைக்கு காரணம் நிதி ஒதுக்கீடு செய்யாமல் கணக்கு ஒதுக்கீடு மட்டும் மேற்கொள்ளப்பட்டதனாலாகும்.

(ஆ) <u>நிதிப் பிரமாணம்</u>

நி பி 371.2(ஆ) உப சரத்து

ஏற்றுக்கொள்கின்றேன்.

எங்கள் நிறுவனத்தின் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு உரிய பணிக்குழுவினரின் எண்ணிக்கை மூன்று பேராக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதனால், முற்பணத்தொகை வழங்கும் பொழுது ரூபா 20,000 எனும் உச்சளவு நடைமுறைக்கு சாத்தியமற்றதாகும். அத்தோடு எங்கள் சபையினால் அனுமதியளிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தின் படி செயற்படுத்தப்படும் கருத்திட்டத்திட்டங்கள் நிறுவனத்திற்கு வெளியில் நாடாளாவிய ரீதியில் செயற்படுத்தப்படுவதனால் ரூபா 20,000ற்கும் அதிகமான முற்பணக் கொடுப்பனவினை வழங்க வேண்டியிருந்தது.

(இ) <u>அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை</u>

1.2.1 உபசரத்து

ஏற்றுக்கொள்கின்றேன்.

இந்தப் பிழையை, 2012ஆம் ஆண்டில் நிவர்த்தி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(ஈ) சுற்றறிக்கை

<u>இலக்கம் ஜிஈடி∴12 உடைய 02 ஜூன் 2003ம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை</u>

(1) 5.2.6 உப சரத்து

ஏற்றுக்கொள்கின்றேன்.

இந்தப் பிழையை, 2012ஆம் ஆண்டில் நிவர்த்தி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(11) 6.5.1 உபசரத்து

ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வேளையில் 2006, 2007, 2008, 2009ம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு. 2010ஆம் ஆண்டுக்கான அறிக்கை தயாரிக்கப்பட்டு ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்டள்ளது. 2011ஆம் ஆண்டின் ஆண்டிற்க்கை தயாரிக்கப்படுகின்றது.

(111) 7.4.2 உபசரத்து

ஏற்றுக்கொள்கின்றேன்.

## பிரிவு – 03

## நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவு

ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

3.2. விரிவான நிதி மீளாய்வு

ஏற்றுக்கொள்கின்றேன்.

## பிரிவு – 04

4.1 செயலாற்றுகை

(அ) ஏற்றுக்கொள்ளவில்லை.

குறிப்பில் மொத்த மீண்டுவரும் செலவு என்பது மொத்தச் செலவு எனவும், மொத்த மீண்டுவரும் செலவின் வீதம் எனும் மனித வள அபவிருத்தி செலவானது மொத்தச் செலவின் வீதம் என மனித வள அபிவிருத்தி செலவு எனவும் திருத்தப்படல் வேண்டும்.

(ஆ) எப் - 9 நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டம் எப் -9 என இல்லாது டபில்யூ - 9 நிகழ்ச்சித்திட்டம் என திருத்தப்படுதல் வேண்டும். அத்தோடு டபில்யூ - 9 என்பது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கோவை இலக்கப் பெயர் மட்டுமேயாவதுடன், அதன் கருத்திட்டப் பெயராக அமைவது **க.பொ.த (சா.த) சித்தியடையாத மாணவர்களை ஊக்குவிப்பதற்காக பாரிய தேசிய உபசரணை** என்பதாகும்

(1) ஏற்றுக்கொள்கின்றேன்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை இலங்கையில் முதன்முதலாக செயற்படுத்த ஆரம்பிதத்தது இவ்வருடத்தினுள்ளாகும். அதனால் இதனை மக்களுக்கிடையில் பிரபல்யமான கருத்திட்டமாக கொண்டு செல்வதற்கும் மற்றும் அதற்காக மக்களின் கவனத்தைத் திருப்புவதற்கும் மின்னியல் மற்றும் அச்சக ஊடகங்கள் மூலமான பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கு வேண்டிய தேவை ஏற்பட்டது.

எங்கள் ஆய்வுகளில் இருந்து கண்டறிந்தவாறு இது சமூகத்தில் காணப்படும் மிகப் பெரிய சமூகப் பிரச்சனையாகும். அதனால் அதற்கான செலவினை மேற்கொள்வதற்கு பல்வேறு தரப்பினரின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கும், மக்களின் கருத்து மற்றும் யோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் ஊடாகம் மூலமான பிரச்சாரம் அத்தியாவசியமானதுடன், இதன் மூலம் கருத்திட்டத்திற்கு மிகப் பெரிய பெறுமதி கிடைத்தது.

(11) ஏற்றுக்கொள்ளவில்லை

மேற்குறிப்பிட்ட (ஆ) பிரிவில் குறிப்பிட்ட எங்கள் கருத்திட்டத்தின் நோக்கமாக அமைந்தது க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களை ஊக்குவிப்பதாகும். இங்கு புள்ளிவிபரம் பயன்படுத்தப்பட்டது ஆய்வு தேவைக்காக மட்டுமேயாகும்.

எங்கள் நிறுவனத்திற்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்காகவும் மேற்குறித்த கருத்திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது.

(111) ஏற்றுக்கொள்ளவில்லை.

அந்த கருத்திட்ட அறிக்கையில் 04ம் இலக்க அவதானிப்பு முறையின் கீழ் மேற்குறித்த கருத்திட்டம் 25 மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன், தேவைக்கேற்ப அடிப்படையகக் கொள்ளப்பட்ட இந்த புள்ளி விபரங்களை மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது எனக் குறிப்பிடப்பட்டள்ளது. அதன்படி நடைமுறையில் காணப்பட்ட நிலமையின் படி 14 மாவட்ட கருத்தரங்குகளே நடாத்தப்பட்டது.

மாவட்ட கருத்தரங்குகளுக்கு வந்திருந்த அனைத்து மாணவர்களுக்கும் தொழில் வழிகாட்டல் உட்பட பரந்தளவிலான அறிவு பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன், இதில் விருப்பமுள்ள மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மட்டும் முகாம்களில் பங்குபற்றினர். கருத்தரங்கு நடாத்தப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் முகாம்களுக்கு வருகை தருவதற்கு விருப்பம் தெரிவித்த மாணவர்களுக்கு மட்டும் வதிவிட முகாம்கள் நடாத்தப்பட்டது.

(ஏை) ஏற்றுக்கொள்கின்றேன்.

இது மிகப்பெரிய சமூகப் பிரச்சனையாதலினால், இது தொடர்பாக கல்வியாளர் குழுவுடன் கலந்தரையாடல் சுற்றுக்கள் பல நடாத்தப்பட்டது. எனினும் அவர்களினால் குறிப்பான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை சமர்ப்பிப்பதற்கு முடியாது போனதற்கு காரணம் இது சிக்கலான சமூகப் பிரச்சனை என்பதனாலும்.

(எ) ஏற்றுக்கொள்ளவில்லை.

க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கு அவர்கள் எதிர்பார்க்கும் தொழிற் பயிற்சி பாடநெறிகளை பயிலுவதற்கு பயிற்சி நிறுவனங்களில் சந்தர்ப்பங்கள் இல்லையென்பதை நாம் கண்டறிந்துள்ளோம். அது தொடர்பாக அமைச்சர் மற்றும் அனைத்து தொழிற் பயிற்சி நிறுவனங்களின் தலைவர்களுடன் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பிரதிபலனாக யுேஜவுயு நிறுவனத்தின் மூலம் எந்தவொரு அடிப்படைத் தகுதியுமற்றவர்களுக்கு ஏேஞ டுநுஏநுடு ஐ ந்கான சந்தர்ப்பத்தினை பெற்றுக்கொடுப்பதற்கு எங்களால் முடிந்தது.

(எை) ஏற்றுக்கொள்ளவில்லை.

மேற்குறிப்பிட்ட (ஆ)(1) இல் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு கவர்ந்திழுக்கக்கூடிய பிரச்சாரத்தின் அவசியம் ஏன் என்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு முதலாவது இலக்காகக் கொள்ளப்பட்ட மாணவர்கள் எதேட்சையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு காணப்படும் அடிப்படைப் பிரச்சனை கண்டறியப்பட்டதுடன், அந்த விடயங்களை கல்விசார் குழுவுடன் கலந்துரையாடி, அதற்கான தீர்வினை வழங்குவதற்கு நாம் முயற்சி எடுக்கின்றோம். அதில் அவர்களின் எதிர்பார்ப்பை கண்டறிந்த நாம் ‘சமூகத்தில் தாழ்த்தப்பட்டுள்ள, தோல்வி மனப்பான்மையில் இருக்கும் மாணவ மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையாத போதிலும், அவர்கள் வாழ்கையில் தோல்வி அடையவில்லை’ எனும் கருத்தை நேர்மறை எண்ணத்துடன் காண்பதற்கும், அவர்களில் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர்ந்து வாழ்கையில் வெற்றி பெறுவதற்கும் அவசியமான மன தைரியத்தை வழங்குவதற்காக வதிவிட முகாம்களை செயற்படுத்தினோம். அதன் போது, அவர்களின் வெற்றிவாய்ப்பை வெளிப்படுத்தி, தன்னம்பிக்கையை விருத்தி செய்வதற்கு செயல்முறையான, பிரயோக ரீதியான, ஒழுங்குமுறையிலான நிகழ்ச்சி ஒழுங்கொன்று எம்மால் செயற்படுத்தப்பட்டது.

நிகழ்ச்சி முடிவடைந்து வீடுசெல்லும் பிள்ளைகளின் கண்ணில் நாம் கண்டது அவர்கள் தோல்வியடையாது தொடர்ந்தும் வாழ்க்கையை வெற்றிகொள்வதற்கான வழி உள்ளது என்பதை உணர்ந்துள்ளார்கள் என்பதையாகும். அத்தோடு, பெற்றோர்கள், அந்த மாணவர்களின் மாறுதலைக்கண்டு நன்றி கூறியதை பெருமையாகக் கருதுகின்றோம். கருத்திட்டத்தின் வெற்றியினை தீர்மானிக்கும் பொழுது புள்ளிவிபர தகவல்களை விடவும் அதன் தரமே அங்கு முக்கியமானதாகும்.

வதிவிட முகாம் நிறைவடைந்தவுடன் பிள்ளைகள் எதிர்பார்த்த இலக்கினை நோக்கிப் பயணம் செய்வதற்குரிய மனநிலையினை உருவாக்குவதற்கு முடிந்தமை எங்கள் கருத்திட்டத்தின் வெற்றியாகும்.

(இ) ‘தொழிலற்றததில் இருந்து தொழிலுக்கு’ கருத்திட்டம்

எங்கள் அமைச்சின் கௌரவ பிரதி அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க 2012ம் ஆண்டு தயட கிருள தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக அனுராதபுர மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவினுள் பரந்திருக்கும் இளைஞர்களுக்கு தொழிற்தகைமையை வழங்குதல் தனியார் பிரிவுகளில் தொழிலில் ஈடுபடல் தொடர்பான எண்ணக்கருவினை மாற்றுதல், பூர்த்தி செய்திருக்கும் தகைமையின் அடிப்படையில் தனியார் துறையின் தொழிலுக்கு ஈடுபடுத்தல் போன்ற நோக்கங்களுக்காக ஓர் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

2011 செயற்பாட்டு திட்டத்திற்கு வெளியில் மிக விரைவில் ஆரம்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்ட இந்த கருத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு அப்போதிருந்த பிரதான பிரச்சனை நிறுவனத்தின் ஊழியர் பற்றாக்குறையாகும். கௌரவ பிரதி அமைச்சரினால் அதற்கு தீர்வாக ஒப்பந்த அடிப்படையில் ஆலோசனையாளர்கள் மற்றும் அலுவலர்களின் ஒத்துழைப்பைப் பெறுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

(1) ஏற்றுக்கொள்ளவில்லை.

மேற்குறித்த கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஆலோசனை கிடைத்திருந்த போதிலும், ஒவ்வொரு வார இறுதியிலும் செயற்படுத்தப்படும் நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பமாகியிருந்ததனால், மிக விரைவில் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான தேவை இருந்ததினால் கருத்திட்டத்திற்கு அவசியமான நிபந்தனைகளுடன் கேள்விப்பத்திர ஆலோசனையாளர் முறை மூலம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எங்கள் நிபந்தனைகளுக்கு அமைவாக சம்மதத்தினை தெரிவித்திருந்த ஆலோசனையாளருடன் பேச்சுவார்த்தை நடத்தி அவரின் தகைமை மற்றும் ஏனைய அலுவலர்களின் தகைமை பரீட்சிக்கப்பட்டு ஒழுங்குமுறையான ஒப்பந்தத்தின் கீழ் கருத்திட்ட நடவடிக்கைகள் பாரமளிக்கப்பட்டதுடன், நிறுவன உத்தியோகத்தர்களின் பூரண மேற்பார்வையின் கீழ் கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

ஆலோசனையாளருடனான ஒப்பந்தத்தின் படி கருத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதனால், எங்கள் ஏனைய கருத்திட்டங்களுக்காக அந்த ஆலோசனையாளரின் ஒத்துழைப்பு பெறப்பட்டது. அதற்குக் காரணம் அவரால் சேவை திருப்திகரமாக நிறைவேற்றப்படும் என நிலையத்திற்கு பொறுப்பான அலுவலர் நம்பியதனாலாகும். தயட கிருள கண்காட்சி பூமியினுள் எங்கள் நிறுவனத்திற்கு உரிய கண்காட்சிக் கூடத்திலிருந்து இணையம் மூலமாக நேரடியாக கௌரவ பிரதி அமைச்சருடன் மேற்கொள்ளப்பட்ட நேரடிக் கலந்துரையாடலின் போது இந்த கருத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது என கூறியது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அது தொடர்பான அனைத்துக் காட்சிகளும் எங்களிடமிருப்பதாக கணக்காய்வு அலுவலர்களுக்கு நாம் அறியத்தந்துள்ளோம்.

(11) ஏற்றுக்கொள்கின்றேன்.

மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தில் பிரதேச செயலகங்களில் செயற்படுத்தப்படும் நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டத்திற்கு வந்திருந்தவர்களில் எங்கள் சேவையைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் வந்தவர்களுக்கு யாதேனும் தொழிற் பயிற்சிகள் உள்ளதா? எனும் விடயம் தொடர்பாக தேடிப்பார்ப்பதுடன், அவ்வாறு இல்லாத நபர்கள் எங்கள் அமைச்சின் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு அனுப்பப்படுவர்.

தொழில் தேடி வரும் அனேக இளைஞர்கள் அரச தொழிலை நாடியே வருவதுடன், தனியார் துறை தொழிலுக்கு செல்வதன் முக்கியத்துவம் பற்றி எம்மால் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அவர்கள் தொடர்ந்தும் அதே எண்ணத்திலேயே இருந்தனர். அதனால் தனியார் துறையில் தொழிலைப் பெற்றுக்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்த நபர்களை மாத்திரம் நாம் பதிவுசெய்து கொண்டோம்.

இளைஞர்களை தொழிலுக்கு இணைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்காக 'தேசிய தொழில் பொருத்தும் மத்தியநிலையம் ' எனும் பெயரில் தேசிய தொழில் வங்கி 05.02.2012ம் திகதி ஒயமடுவ தயட கிருள கண்காட்சி பூமியில் அதிமேதகு ஜனாதிபதியின் கையினால் மக்களுக்கு கையளிக்கப்பட்டது. தயட கிருள நடமாடும் சேவையின் பொழுது பதிவுசெய்யப்பட்ட அனைத்து தொழில் எதிர்பார்ப்பார்களினதும் வர்ண நிழல்படத்துடன் அவர்களது விபரங்கள் வெப்தளத்தில் சேர்க்கப்பட்டள்ளது. அதில் பதிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் தகைமை பரீட்சிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்கப்படும். ரௌசஉ.நெவ தேசிய தரவுத்தளத்தின் ஊடாக தொழிலை எதிர்பார்ப்பவர்களும் தொழில் வழங்குனர்களும் இலகுவாக, சுதந்திரமாக செயற்படுவதற்கு சந்தர்ப்பம் உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட எண்ணிக்கை மற்றும் விபரங்கள் தொழில்தருனர்களினால் எங்களுக்கு வழங்கப்படவில்லை.

மேற்குறித்த வெப் தளம் நாளாந்தம் பதிவேற்றம் செய்யப்படுவதனால் பதிவுசெய்யப்படும் தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை அடிக்கடி மாறுபடுகின்றது. கணக்காய்வு தினத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த தனியார் நிறுவனங்கள் பற்றிய விபரங்கள் கணக்காய்வு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டதுடன் ரௌசஉ.நெவ இன் கீழ் தற்போதும் இத்தகவல்களை அவதானிக்க முடியும்.

(111) ஏற்றுக்கொள்ளவில்லை.

தயட கிருட தேசிய கண்காட்சிக்கு சமாந்தரமாக செயற்படுத்தப்பட்ட ''அனுராதபுர மாவட்ட அபிவிரத்தி வாரம்' எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அந்தந்ந பிரதேச செயலகத்தில் வார இறுதி நாட்களில் செயற்படுத்தப்பட்ட நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் முழுமையான நடவடிக்கைகள் அந்தந்நத பிரதேச செயலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. அந்த நடமாடும் சேவைக்கு மக்களை அழைத்துவரும் பொறுப்பு முழுமையாக சாட்டப்பட்டது அதன் ஒருங்கிணைப்புக் குழுவிற்காகும். கிட்டத்தட்ட 50 நிறுவனங்களின் ஊடாக மக்களுக்கு பல்வேறுபட்ட நடமாடும் சேவைகள் வழங்கும் போது பிரதேச ரீதியாக அந்த மக்களின் மிகக்கிட்டடிய பிரச்சனைக்கு அவர்களுக்கு தீர்வினை பெற்றுக்கொள்வதற்கு முன்வந்தனர் என்பது உண்மையான நிலமையாகும். அங்கு நீர், மின்சாரம் பெற்றுக்கொள்ளல், நிரந்தை வீட்டுப் பிரச்சனை, காணி உறுதியினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளல். மூக்குக் கண்ணாடி மற்றும் மூலிகைகளைப் பெற்றுக் கொள்ளல போன்ற அவர்களுக்கு மிகமுக்கியமான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஒருங்கிணைப்புக் குழுவின் மூலம் எங்கள் நிறுவனத்திற்கு நடமாடும் சேவைக்காக வழங்கப்பட்ட இடம் மற்றும் வசதிகள் என்பன இதனால் பாதிப்புக்குள்ளானது.

மேற்குறித்த (11) இல் குறிப்பிடப்பட்ட விதத்தில் எங்கள் சேவைக்கு வந்திருந்தவர்களில் தொழில் தகைமை இல்லாதவர்கள் வதிவிட பயிற்சிக்கு அனுப்பப்பட்டதுடன், தனியார் துறைக்கு தொழிலுக்காக செல்ல விருப்பம் தெரிவித்தவர்களை மட்டும் பதிவுசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும் அதிக எண்ணிக்கையானோர் அரச தொழிலைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் வந்திருந்தனர். எங்களால் அவர்களுக்கு தனியார்துறை தொழிலுக்கு செல்வதன் முக்கியத்துவம் பற்றி ஆலோசனை சேவை வழங்கப்பட்டது.

கௌரவ பிரதி அமைச்சரின் நோக்கமாக அமைந்தது என்னவெனில் தனியார் துறையில் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதின் முக்கியத்துவத்தினை மக்களுக்கு அறியத்தருவதாகும். அதற்கேற் வகையில் எங்கள் பத்திரிகை அறிவித்தல் நிர்மாணிப்புத் திறன் மூலம் அதனை வெளிப்படுத்தினோம்.

அனுராதபுர மாவட்டம் தொடர்பான மக்கள் குடித் தொகை புள்ளிவிபரத்தினை அவதானித்தால் அதில் தொழில்ற்றோர் தொகை ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகவே காணப்படுவதோடு, இந்த மாவட்டத்தின் இளைஞர்கள் தங்களது காணிகளையும் சொத்துக்களையும் விட்டுவிட்டு வெளியிடங்களுக்கு சேவைக்காக செல்வதற்கு விரும்புவதில்லை என்பது அவர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலில் இருந்து தெரிய வந்த முக்கிய விடயமாகும்.

மேற்குறித்த கருத்திட்டத்தின் நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் வீடியோ படங்கள் மூலம் எங்களால் வழங்கப்பட்ட சேவை பற்றிய சாட்சியினை வழங்க முடியும். எங்களால் அவற்றில் சில கணக்காய்வு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறித்தவகையில் நடைமுறை நிலமையை கருத்தில் கொண்டு கருத்திட்டத்தினை வெற்றிகரமாக முடித்துள்ளதென்பதாக விபரிக்கப்படுமாயின் நாம் அதனை மெச்சுவோம்.

(இ) விசேட ஆய்வு மற்றும் கணக்கெடுப்பு

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் காலத்திற்கு காலம் மேற்கொள்ளக்கூடிய விசேட ஆய்வு மற்றும் ஆராய்ச்சிகளுக்கு சட்டத்தின் மூலம் அங்கீகாரம் அளிக்கப்பட்டள்ளது. அதன் படி தேவைக்கேற்ப செயற்படுவதற்காக செயற்பாட்டு திட்டத்தில 04 ஆராய்ச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(1) ஏற்றுக்கொள்ளவில்லை.

மனித வள அபிவிருத்தி எனும் பரந்த விடயப் பரப்பினுள் காலத்திற்கு காலம் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொண்டு, அந்த அறிக்கையை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து, அதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர் அதனை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்படும். அதன் பின்னரான தீர்மானங்கள் பணிப்பாளர் சபையினாலேயே மேற்கொள்ளப்படும்.

இதன் போது நாம் உரிய கருத்திட்டத்தின் பிரச்சனைகள் தொடர்பான அவதானிப்பினை மேற்கொண்டு யோசனையை சமர்ப்பித்தலை மட்டுமே மேற்கொள்ளுகின்றோம்.

(11) ஏற்றுக்கொள்ளவில்லை.

'சாதாரண தரத்தினை சித்தியடையாத மாணவர்களின் எதிர்காலக் கஸ்டங்களைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு எனக் குறிப்பிட்டுள்ளதன் மூலம் (ஆ) ஏஐ வில் உள்ளவாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டடிருந்த போது, அவர்களின் எதிர்பார்ப்பு தொடர்பான முழுமையான அவதானிப்பின்றி மேற்குறிப்பிட்ட கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டிருப்பதாக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுளது பொய்யான கூற்று எனத் தெரிக்கின்றது.

சாதாரண தரத்தினை சித்தியடையாத மாணவர்களுக்காக இந்த கருத்திட்டம் எங்களினால் முதல் முறையாக செயற்படுத்தப்பட்டதனால், அது பற்றி இரண்டாம் தர மற்றும் ஆரம்ப அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இந்த பிரச்சனையின் தன்மையினை கண்டறிவதற்கு ஆரம்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு அத்ன மூலம் சமூக பிரச்சனையின் தன்மை, அதன் பாரதூர தன்மை கண்டறியப்பட்டது. இது தொடர்பாக பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய கல்விமான்கள், அறிவாளிகள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆசிரியர்கள் என்பவற்களுடன் கலந்துரையாடி ஒழுங்குமுறையிலான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும், அவர்களிடமிருந்து உறுதியான நிகழ்ச்சித்திட்ட யோசனையொன்று கிடைக்கவில்லை. எங்கள் சபையில் உள்ள மிகச் சிறிய எண்ணிக்கையை உடைய ஊழியர்களின் முயற்சியின் மூலம் எங்கள் அறிவுக்கெட்டிய விதத்தில் இந்தப் பிள்ளைகளுக்காக யாதேனும் சான்றிதழைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்காக மாவட்ட ரீதியில் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அறிவினை வழங்குவதற்காக கருத்தரங்கு மற்றும் வதிவிட முகாம்கள் நடாத்தப்பட்டு அவசியமான பயிற்சிக்கான சந்தர்ப்பத்திற்காக யேஐவயு நிறுவகத்திற்கு அனுப்பப்பட்டனர். இது பற்றி (ஆ) பிரிவில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

(உ) மனித வள ஆண்டு

ஏற்றுக்கொள்ளவில்லை

மனித வள ஆண்டுக்காக செயற்படுத்தப்பட்ட ஒரு கருத்திட்டமான 'தேசிய நிபுணத்தவ மதி' கருத்திட்டம் 'நட்சத்திர யுகத்தின் முடிவில் - மதி முன்னிலைக்கு வரும்' *நிபுணதா யொவ்வனயே ரியாலிடி அதிஸ்டானய* எனும் கருப்பொருளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. எல்லா தொழிற்பயிற்சி துறையினையும் உயர்த்தி வைப்பதோடு, பாரம்பரிய தொழிலுக்கு உரிய கௌரவத்தினை வழங்குவதும், தொழிற்பயிற்சி பாடநெறிகள் தொடர்பான மாணவர்களின் கவனத்தை திருப்புவதும் நோக்கமாகக் கொண்டு மாணவர்களை கவர்ந்திழுக்கும் வகையில் மெகா ரியாலிட்டி நிகழ்ச்சி பிரபல்ய தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்புவதற்கு திட்டமிடப்பட்டிருந்து.

நிகழ்ச்சி தொடர்பாக மக்களை அறிவூட்டுவதற்காக அவர்களின் பிரதிபலிப்பு, எண்ணத்தினை நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்கு முன்னரே அறிந்துகொள்வதற்காக வேறு கருப்பொருளின் கீழ் ஊடகங்களின் ஊடாக பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் போது கிடைக்கப் பெற்ற யோசனைகள் நிகழ்ச்சி அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டது.

தற்போது சிரச தொலைக்காட்சி, சிரச எப்எம் நிறுவனத் தலைவர்களுடன் மேற்குறித்த கருத்திட்டம் தொடர்பாக பல சுற்றுக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கு உரிய மதிப்பீடு தயாரித்தல் மற்றும் நிகழச்சிக்கு உரிய முன் பிரச்சார நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(ஊ) மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

ஏற்றுக்கொள்ளவில்லை.

2011ஆம் ஆண்டினுள் மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வேறாக செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது ஒரு நிகழச்சித்திட்டத்திற்காக மட்டுமாகையினால் அது மக்களை அறிவூட்டும் நிகழச்சி ஒன்று மட்டுமே என கணக்காய்வாளர்களினால் புரிந்துகொள்ளப்பட்டிருந்தது. எனினும் எங்களினால் செயற்படுத்தப்படும் சாதாரண தரம் மற்றும் உயர் தரத்தில் சித்தியடையாத மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட கருத்திட்டங்களில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் மட்டும் 04 மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களும், மாவட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் 20ற்கும் மேற்பட்ட மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது. அது பற்றிய தகவல்களை அந்த கருத்திட்டத்திற்குரிய கோவைகளில் இருந்து உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

(எ) ஏற்றுக்கொள்கின்றேன். இது பணிப்பாளர் சபையின் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டது.

(ஏ) கருத்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டது.

(11) ஏற்றுக்கொள்கின்றேன்.

உரிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்குறித்த தரவு வங்கியினை நிர்மாணிப்பதற்கான முன்னனுபவத்தை புரிந்துகொள்ளுவதற்காகவாகும்.. இதன் மூலம் தெரியவந்தது எங்களின் சபைக்கு உரிய பௌதீக, மனித மற்றும் நிதி வளங்கள் இவ்வாறான நாடாளாவிய ரீதியிலான கருத்திட்டத்தை செயற்படுத்தவதற்கு போதுமானதல்ல என்பதாகும். அதனால் 2010ஆம் ஆண்டு இது இடைநிறுத்தப்பட்டதுடன், இதுபற்றி 2010ஆம் ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(11) ஏற்றுக்கொள்கின்றேன்.

இது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுப்பதற்கான சந்தர்ப்பம் எங்கள் சபையின் பணிப்பாளர் சபையிடம் உள்ளது.

(111) ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த கருத்திட்டம் 2010ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டு வருவதுடன், இதற்கான கணக்காய்வுப் பதில் மேற்குறித்த பதிலின் மூலம் குறிப்பிடப்பட்டள்ளது.

(ஐ) 2011ஆம் ஆண்டு வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் முதற்தடவையாக ஆரம்பிக்கப்பட்டதனால், மக்களுக்கிடையில் அதை பிரபல்யப்படுத்துவதற்கு புதிய முகத்தோடு கொண்டு செல்வதற்காக ஊடக பிரசாரம் பயன்படுத்தப்பட்டது. தற்போதைய சமூதாயத்தினுள் எந்தவொரு விடயத்தையும் வெற்றிகரமாக்குவதற்கும் தோல்விகரமாக்குவதற்கும் ஊடாகம் வழங்கும் பங்களிப்பு அளப்பரியது. இலாப நோக்கோடு செயற்படும் மக்கள் ஊடக நிறுவனங்கள் தேசிய முக்கியத்துவம் வழங்கக்கூடிய நிகழ்ச்சிகளை இலவவமாக ஒளிபரப்புவதற்கு முன்வரப் போவதில்லை. உதாரணமாக பத்திரிகையில்

கருத்திட்டம் தொடர்பான கட்டுரையொன்றினை பிரசுரிக்க வேண்டுமானால், அந்த பத்திரிகையில் வியாபார அறிவித்தல் ஒன்றைப் பிரசுரிக்க வேண்டிய நிலையில் இன்று ஊடகங்கள் செயற்படுகின்றன.

பிரிவு – 05

கணக்கீட்டு நடவடிக்கைகளின் சுபாவம் மற்றும் சிறந்த நிர்வாகம்

5.1 கூட்டிணைந்த திட்டம்

(அ) ஏற்றுக்கொள்கின்றேன்.

இந்தப் பிழையினை 2013ஆம் ஆண்டில் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) ஏற்றுக்கொள்கின்றேன்.

இந்தப் பிழையினை 2013ஆம் ஆண்டில் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5.2 செயற்பாட்டுத் திட்டம்

(அ) ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த 8 நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பூர்த்திசெய்வதற்கு பயன்படுத்தப்பட்டது. அதன்படி அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி வழங்கப்பட்டது.

(ஆ) ஏற்றுக்கொள்கின்றேன்.
திருத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தில் இந்த மனித வள ஆண்டு எனும் பெயருடைய நிகழ்ச்சித்திட்டம் உள்ளடங்குனின்றது.

(இ) ஏற்றுக்கொள்ளவில்லை.

ஒரு பிரதான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையானது நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தும் பொழுது இடையில் வேறுபட்டதுடன், சில நிகழ்ச்சித்திட்டங்களை ஒரு மாவட்டத்தில் இரு மொழிகளில் நடாத்துவதற்கான தேவை ஏற்பட்டது. இதன் காரணமாக நாடளாவிய ரீதியில் மாவட்ட மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தும் பொழுது இடையில் அவர்களின் தேவை மற்றும் எண்ணத்தினை அறிந்து செயற்படுவதற்காக யோசனை செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் சுபாவம் மாற்றம் அடைந்தது. இதன் காரணமாக நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு போதியளவில் இல்லாத நிலமையில் செலவினை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது.

5.3 உள்ளக கணக்காய்வு

ஏற்றுக்கொள்கின்றேன்.

தற்போது இணை அமைச்சின் உள்ளக கணக்காய்வு அலகின் மூலம் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

5.4 வரவு செலவு ஆவணங்களின் நிர்வாகம்

ஏற்றுக்கொள்கின்றேன்.

இதற்கு காரணம் வரவு செலவுத்திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டமையாகும். (இணைப்பு 02)

<u>பிரிவு – 06</u>

<u>முறைமை மற்றும் நிர்வாகம்</u>

ஏற்றுக்கொள்கின்றேன்.